**கவனிக்க.-** 2010.10.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில பிரதி தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1679 - 2010 නොවැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.11.04

*1679 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1536 |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு**

சுகாதார சேவைகள் திணைக்களம் – மத்திய மாகாணம்

**கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு வழங்கல் - 2011**

**கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கக்கூடிய தகுதியுடைய நபர்களும் நிறுவனங்களும்.**- 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான (இவ்விரண்டு நாட்களும் உட்பட) காலத்திற்கு இத்துடனுள்ள I, II, III ஆம் அட்டவணைகளில் (1) ஆம் நிரலில் குறிப்பிடப்படுகின்ற நிலையங்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக மத்திய மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற இலங்கையர்களிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட அலுவலகங்கள் மற்றும் மத்திய மாகாணத்தில் நிறுவியுள்ள இலங்கையரின் கூட்டுத்தாபனங்களிலிருந்தும், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சங்கங்களிலிருந்தும் அனுப்பப்படுகின்ற முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. **கேள்விப்பத்திர விண்ணப்பங்கள்**.- மீள் செலுத்தப்படாத ரூபா 500 கேள்விப்பத்திர கட்டணமொன்றும் அட்டவணையின் 3 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மீண்டும் செலுத்தப்படும் வைப்புப் பணத்தையும் மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதி உதவியாளரிடம் செலுத்தி சமைத்த உணவு வழங்கல்களுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை கோரும்பொழுது கீழ்குறிக்கப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட சங்கங்களுக்கு கேள்விப்பத்திர கோரிக்கைகளை வழங்குவது தொடர்பாக ஆலோசிப்பதற்கு கீழே 3.2 தொடக்கம் 3.4 வரையுள்ள பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள விதிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.1 **அனுமதிக்கப்பட்டுள்ள சங்கங்கள்** :

(1) சமுர்த்தி கூட்டணி
(2) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
(3) கிராம அபிவிருத்திச் சங்கம்
(4) பதிவுசெய்யப்பட்ட விவசாய அமைப்பு

3.2 (அ) குறிப்பிட்ட சங்கத்தின் அதிகார வரம்பிற்குள் உணவு வழங்குவதற்கு உத்தேசித்துள்ள வைத்தியசாலை அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் அதனை நிரூபிப்பதற்காக பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) (i) சமைத்த உணவு வழங்கல் தொடர்பாக கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி கூட்டணி என்பன நிறுவனத்தின் நிதியிருப்பையும் சமைத்த உணவு வழங்கலுக்கான தகுதியை நிரூபிக்கும் சான்றிதழ் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) பதிவுசெய்யப்பட்ட விவசாய அமைப்புகள் விவசாய சேவைகள் உதவி ஆணையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

3.3 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதிகார வரம்பிற்குள் உணவு வழங்குவதற்கு உத்தேசித்துள்ள வைத்தியசாலை அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் நிதியிருப்பை உறுதிப்படுத்துவதற்கான வங்கியில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் கையளிக்கப்பட வேண்டும். (சங்கத்தின் பெயரில் உள்ள கணக்கொன்றில் பணம் வைப்பிடப்பட்டுள்ளதற்கான சான்றிதழ்)

3.4 மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து அமைப்புகளும் தமது பதிவுச் சான்றிதழை முன்வைக்க வேண்டும்.

3.5 மேற்குறிப்பிட்டுள்ள அனுமதிக்கப்பட்ட சங்கங்களுக்கு, தமது சங்கங்கள் நிறுவப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு விண்ணப்பித்தால் மாத்திரமே அனுசரணை வழங்கப்படும். அவ்வாறில்லாதவிடத்து சாதாரணமான கேள்வி மனுதாரராக கணிப்பிடப்பட்டு செயலாற்றப்படும்.

4. இந்த அனுமதிக்கப்பட்ட சங்கங்களுக்கு மட்டும் 5% (ஐந்து வீதம்) அனுசரணை வழங்கப்படும்.

5. **கேள்விப்பத்திரம் வழங்கல்**.- 2010 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 1 ஆந் திகதி பி. ப. 2.30 மணிவரை அட்டவணை இல. 1, 2 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கண்டி மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும்.

6. **வருமானம் பற்றிய விபரம்**.- கேள்விகளைக் கோருகின்ற சகல கேள்வி மனுதாரர்களும் கேள்விப்பத்திரங்களைக் கோரும்போது தமது ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமான சான்றிதழை 2010 ஆந் திகதிக்குப் பின்னர் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள உடைமை தொடர்பாக

அப்பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொண்ட 170 பொது படிவத்தில் வருமானத்தை முன்வைக்க வேண்டும். அது மாத்தளை, நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கு ரூபா 5 இலட்சமும், தம்புள்ள மாவட்ட தள வைத்தியசாலை தொடர்பாக ரூபா 3 இலட்சமும் ரிக்கில்லகஸ்கட, திக்ஓய, தெல்தெனிய ஆகிய மாவட்ட தள வைத்தியசாலைகளுக்கும் உடபுஸ்ஸல்லாவ, வலப்பனை, மஸ்கெலிய, றத்தோட்டை, கலேவெல பிரதேச வைத்தியசாலைகளுக்கு ரூபா 2 இலட்சமும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளான அக்குறணை, அங்கும்புற, கலகெதர, கடுகன்னாவை, கடுகஸ்தொட்டை, தொலொஸ்பாகே, சங்கராஜபுர, தெல்தொட, உடதும்பற, ஹசலக, மெணிக்ஹின்ன, மடுல்கலை, புஸ்ஸல்லாவ, லக்கல பல்லேகம, கோங்கஹவெல, ஹெட்டிபொல, நாலந்த, மாதிபொல, ஆகரபத்தனை, லிந்துல, வட்டவலை, நம்பொட, பொகவந்தலாவை, கொட்டகலை, மதுரட்ட கோனபிட்டிய வைத்தியசாலைகளுக்கு ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரமும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு ரூபா எழுபத்தைந்தாயிரமும் இருத்தல் வேண்டும். வருமானம் பற்றிய விபரங்களை முன்வைக்க தவறும் கேள்விதாரர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. வருமான சான்றிதழின் பெறுமதியைப் பொறுத்து உணவு வழங்கல் மற்றும் போக்குவரத்து தொடர்பாக கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கக்கூடிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை வரையறைக்குட்படும்.

7. வருமான சான்றிதழின் நிதிப் பெறுமதிக்கேற்ப உணவு வழங்கல் தொடர்பாக கேள்விகளைச் சமர்ப்பிக்கக்கூடிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை வரையறைக்குட்படும். இது தொடர்பாக கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

8. மாவட்ட பொது வைத்தியசாலைகள், டிக்கோயா, தெல்தெனிய மற்றும் தம்புள்ள ஆகிய மாவட்ட தள வைத்தியசாலைகள் மற்றும் வலப்பன, உடபுஸ்ஸல்லாவ, மஸ்கெலிய, ரிக்கில்லகஸ்கட ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் பொழுது கீழ்க்காணும் படிவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் :-

(i) வியாபார பெயர் பதிவுச்சான்றிதழ் ;
(ii) கடந்த 6 மாத காலத்திற்கான வங்கிக்கூற்று ;
(iii) களஞ்சிய, போக்குவரத்து வசதிகள் பற்றிய தெரிவிப்புக்கடிதம்.

9. **பிணை**.- அனைத்து வைத்தியசாலைகள் தொடர்பான இல. I, II, III ஆம் அட்டவணைகளில் (3) ஆம் நிரலில் குறிக்கப்பட்டுள்ள பெறுமதியை கொண்ட மீண்டும் செலுத்தப்பட்ட தொகையின் பிணையொன்று கேள்விதாரர்களினால் கேள்விப்பத்திரங்கள் பெறப்படும் போது மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதி உதவியாளரிடம் பணமாக செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 3.1 இல் குறிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கங்கள் 3.2 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அனுகூலமாக இருந்தால் மட்டும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிணை அவசியமில்லை. ஆனாலும் 3.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அனுகூலமாயின் பிணை வைப்பு அவசியமாகும்.

10. (அ) **அளவுகள்**.- (1) வழங்கப்பட வேண்டிய அவசியமான உணவுகளின் உத்தேச அளவுகள் இத்துடனிருக்கின்ற I, II, III ஆம் அட்டவணைகளின் (6) ஆம் நிரலிலும் IV, V, VI அட்டவணைகளின் (5) ஆம் நிரலிலும் காட்டப்பட்டுள்ளன. (விலை மனுக்கள் சமர்ப்பிக்கும்போது நோயாளர்களுக்காக பூரண உணவுச் சுற்றுக்கான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூரண உணவுச்சுற்று என்பது இரவு, காலை மற்றும் பகல் நேர உணவு வேளைகளை உள்ளடக்கியது.)

(ஆ) சகலவித உணவு சுற்றுக்கும் புதியமீன், கோழி இறைச்சி, கருவாடு, முட்டை பருப்புடன் காய்கறி, ஆகியவற்றுக்கான விலைகள் கேள்வி கோருபவர்களால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சில வேளைகளில் சிக்கன முறையொன்றெனக் கருதி ஒருவித உணவு சுற்றுக்குப் பதிலாக பிறிதொரு உணவுச் சுற்றை வழங்க திணைக்களத்தினால் தீர்மானிக்க முடியும். எவ்வாறெனில், முட்டையுணவுக்குப் பதிலாக இறைச்சியுணவோ, புதிய மீன் உணவோ, கருவாடு உணவோ அதற்கு மேல் இலாபமாக இருப்பின் கோரமுடியும். எவ்வாறாயினும் முட்டை, இறைச்சி, மீன் அல்லது கருவாடு உணவுக்குப் பதிலாக காய்கறி உணவை வழங்க முடியாது. பகல் போசணமாக முட்டையோ, இறைச்சியோ, புதிய மீனோ இராப்போசணமாக இலங்கை பருப்புடனான காய்கறிகளோ வழங்கப்படவேண்டுமென்பதை ஒப்பந்தக்காரர்கள் அறிந்திருக்க வேண்டியுள்ளதோடு மேற்கூறிய உணவுகளை வழங்க ஒப்பந்தக்காரர்களும் ஆயத்தமாகுதல் வேண்டும். அத்துடன் காலை ஆகாரமாக கிழமை நாட்களில் ஒவ்வொரு நாட்களும் சிவப்பரிசி சோற்றுடன் பருப்பு (சமைக்காத அரிசி 75 கிராம், பருப்பு 15 கிராம்), வெங்காய மிளகாய் சம்பலுடன் பால்சோறு (அரிசி 75 கிராம்), பயறுடன் வெங்காய மிளகாய் சம்பல் (பயறு 90 கிராம்), பாண் 120 கிராம் 1 வாழைப்பழத்துடன், கடலை வெங்காய மிளகாய்ச் சம்பலுடன் (கடலை 90 கிராம்). ஏனைய நாட்களுக்கு பாண் அல்லாத வேறு போசணையுள்ள குறைந்த செலவுடைய ஆகாரம் வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர்கள் ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

(இ) நோயாளர்களுக்கான முழுமையான உணவு சுற்றொன்றிற்கு காலை, மதிய, இரவு உணவு (3 வேளை) வழங்குதல் வேண்டும்.

(ஈ) திகன புனருத்தாபன வைத்தியசாலையின் நோயாளர்களுக்காக அட்டவணை இல. 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைகளை முன்வைத்தல் வேண்டும்.

(உ) மாத்தளை வைத்தியசாலையிலுள்ள காச நோயாளர்களுக்கு இல. 6 இல் குறிப்பிட்டுள்ளவாறு விலைகள் முன்வைக்கப்பட வேண்டும்.

11. **கேள்விகளை அனுப்ப வேண்டிய முறை**.- எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி இரண்டாம் பிரதி என்பன வேறு வேறாக கடித உறையிலிட்டு முத்திரையிட்டு ஒரு கடித உறையிலிட்டு "மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர், மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், த. பெ. இல. 163, சங்கராஜ மாவத்தை, கண்டி" என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2011 ...................... மாவட்டத்துக்கான ................... வைத்தியசாலைக்கு உணவு வழங்குவதற்கான கேள்வி" என்று சம்பந்தப்பட்ட நிலையத்தின் பெயரை எழுதி அனுப்பவேண்டியுள்ளதோடு, அதன் இடதுபக்க கீழ் மூலையில் கேள்வி கோருபவரின் பெயரும் முகவரியும் தெளிவாகக் குறிப்பிடப்படுதல்

வேண்டும். கேள்விகளை பதிவுத்தபாலில் அனுப்பவோ, அதற்கென மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடவோ முடியும். கேள்விப்பத்திரங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் தாமதங்கள் குறித்து பொறுப்பேற்கப்படமாட்டாது.

12. **கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல்**.- மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் திகதி முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டு முடிந்தவுடன் அன்றைய தினமே மு. ப. 11.00 மணிக்கு கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் நேரத்தில் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் அவ்விடத்தில் இருக்கலாம்.

13. **கேள்விப்பத்திரம் சம்பந்தமான தீர்மானம்**.- கேள்விப்பத்திரம் தெரிவு செய்யும்போது பிரதானமாக கேள்விதாரர்களினால் படிவத்தின் "ஏ" அட்டவணையில் குறிப்பிட்ட உணவுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் விலைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகை கருத்திற் கொள்ளப்படும். அவ்வாறாயினும் கேள்விப்பத்திரத்தின் "சீ" அட்டவணையிலுள்ள பொருட்களுக்கு அறவிட உத்தேசித்துள்ள விலைகளின் விபரங்கள் குறிக்கப்படுதல் வேண்டும். எனினும் அதற்கான பணம் செலுத்தப்படும் போது கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலை அல்லது அப்போதைக்கு சந்தையிலுள்ள விலை அல்லது பிரதேச செயலாளர் மூலம் நிர்ணயிக்கப்படும் விலைகள் ஆகிய மூன்றில் குறைவான விலைக்கு வழங்கப்படும். கட்டுப்பாட்டு விலையொன்று அமுல்படுத்தப்படுமானால் அந்த விலையின் அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்படும். மேலும் இந்த கேள்விப்பத்திரம் அரசாங்கத்தினால் இடையிடையே வெளியிடப்படும் சட்டதிட்டங்களுக்கும் வரிகளுக்கும் உட்படுத்தப்படும். கேள்வி வழங்குவதற்கான இறுதித் தீர்மானம், மத்திய மாகாண சுகாதார செயலாளர்/மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்/குறித்த மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக கேள்விச்சபை ஆகியவற்றினால் எடுக்கப்படும். மாதமொன்றிற்கு ரூபா ஐம்பதாயிரம் பெறுமதிக்கு கூடிய விலைப்பட்டியல்களுக்கு 5% தரிப்பு வரியொன்று அறவிடப்பட்டு தேசிய வருமான ஆணையாளருக்கு செலுத்தப்படும்.

14. கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலைக்கும், திகன புனருத்தாபன வைத்தியசாலைக்கும், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலைக்கும் நுவரெலியா மாவட்டத்தில் டிக்கோயா மாவட்ட ஆதார வைத்தியசாலைகளுக்கும், மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலைக்கும் உணவு சமைத்து வழங்குவதற்கு (வாயு) கேஸ் பாவிக்க வேண்டிவரும். ஆகவே மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும்போது இதனை கவனத்தில் கொள்ளவும்.

15. **கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் செல்லுபடியாகக் கூடிய காலம்**.- கேள்விப்பத்திரத்தில் கோரியவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள விலை விபரங்கள் இதில் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறை முடியும் வரை செல்லுபடியாகும். ஒப்பந்தக்காரரின் கையொப்பம் இடப்பட்ட உறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் எந்தவொரு காரணத்துக்காகவும் அந்தக் காலத்திற்குள் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

16. **பிணை வைப்புப் பணம்**.- தெரிவு செய்யப்படுகின்ற கேள்விப்பத்திரதாரர் ஒப்பந்தப்பத்திரமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அதற்கு மேலதிகமாக கேள்வியின் முழுப்பெறுமதியின் 10% பெறுமதியுள்ள பிணையொன்றை (இலங்கையில் நடைமுறையிலுள்ள மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட) சமர்ப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட முதலாவது மாதத்திற்குள் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாத கேள்விப்பத்திரதாரர்களுக்கு எத்தகைய கொடுப்பனவும் செலுத்தப்படாத அதேவேளை ஒப்பந்தத்தை சரிவர செய்யவில்லை என கருதி தடைசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலுக்கு உட்படுத்தப்படும்.

17. **பொருட்களை வைத்திருத்தல்**.- தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்களின் பொருட்பண்டங்களை களஞ்சியப்படுத்தி வைத்துக்கொள்வதற்காக நிலையத்தில் அல்லது அங்கு அமைந்துள்ள காணியில் இடவசதி செய்து தரப்படமாட்டாது.

18. **கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமான நிபந்தனைகள்**.- கேள்விகள் சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரத்தின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. கேள்விப்பத்திரதாரர்களாக விரும்புபவர்கள் அதிலடங்கியுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டியது அவசியமாகும் அத்துடன் அவற்றை பின்பற்றவும் வேண்டும்.

19. **வழங்கப்படவேண்டிய அரிசி அளவும் வகையும்**.- கேள்விப்பத்திரதாரர்களினால் காட்டப்பட்டுள்ள விலைகளுக்கேற்ப நோயாளிகளுக்கு ஒரு வேளை உணவுக்கு 100 கிராம் வீதப்படி இருவேளை சோற்றுக்குத் தேவையான சமைக்காத அரிசி வழங்கப்படுதல் வேண்டும். சோற்றுக்காக சிவப்பு தவிட்டு அரிசி மாத்திரம் வழங்கப்பட வேண்டும்.

20. கேள்விகளை வழங்குவதற்கு தடைசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு (கொந்தராத்து) மற்றும் சங்கங்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் தொடர்பாக கேள்விச்சபையினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

(டாக்டர்) சாந்தி சமரசிங்க,
சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
த. பெ. இல. 163, சங்கராஜ மாவத்தை,
கண்டி,
2010, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி.

*அட்டவணை I*

2011 ஆம் ஆண்டுக்கான சமைத்த உணவு வழங்குதல் - கண்டி மாவட்டம்

| 1<br>நிலையம் | 2<br>கேள்விப் பத்திர கட்டணம் ரூபா ச. | 3<br>பிணைப் பணம் ரூபா ச. | 4<br>வருமான சான்றிதழின் பெறுமதி ரூபா ச. | 5<br>கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித்திகதி | 6<br>உணவின் அளவு அண்ணளவாக<br>நோயாளர்களுக்கு<br>புதிய மீன் | <br><br>கோழி இறைச்சி | <br><br>கருவாடு | <br><br>காய் கறி | <br><br>முட்டை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்ட பொது வைத்தியசாலை | | | | | | | | | |
| 1. நாவலப்பிட்டிய | 500 0 | 5,000 0 | 5,00,000 0 | | 6,791 | 7,727 | 7,536 | 7,446 | 23,421 |
| மாவட்ட ஆதார வைத்தியசாலை | | | | | | | | | |
| 2. தெல்தெனிய | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 1,050 | 1,120 | 1,080 | 1,200 | 3,140 |
| பிரதேச வைத்தியசாலைகள் | | | | | | | | | |
| 3. அக்குறணை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 1,160 | 1,080 | 1,080 | 1,120 | 3,380 |
| 4. அங்கும்புற | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 860 | 850 | 940 | 860 | 2,680 |
| 5. தெல்தொட்ட | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 800 | 880 | 960 | 900 | 2,680 |
| 6. தொலொஸ்பாகே | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 180 | 120 | 180 | 240 | 540 |
| 7. கலகெதர | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | 2010, டிசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 740 | 630 | 1180 | 880 | 1,240 |
| 8. மெனிக்ஹின்ன | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 900 | 1,020 | 940 | 1,000 | 1,660 |
| 9. மடுல்கலை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 1,620 | 1,910 | 1,840 | 1,870 | 5,040 |
| 10. புஸ்ஸல்லாவ | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 750 | 720 | 660 | 640 | 1,740 |
| 11. உடதும்புற | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 740 | 900 | 810 | 840 | 2,260 |
| 12. கடுகன்னாவ | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 760 | 700 | 740 | 740 | 2,090 |
| 13. கடுகஸ்தொட்ட | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 740 | 720 | 880 | 1,190 | 1,380 |
| 14. ஹசலக | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 900 | 940 | 960 | 940 | 2,405 |
| 15. சங்கராஜபுர | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 330 | 330 | 330 | 310 | 870 |
| 16. மாம்பிடிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 640 | 660 | 670 | 610 | 1,680 |
| 17. மாரஸ்ஸன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 800 | 910 | 820 | 870 | 2,250 |
| 18. மெதவல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 380 | 310 | 640 | 1,300 | 1,200 |
| 19. மினிப்பே | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 960 | 540 | 520 | 450 | 1,000 |
| 20. வத்தேகம | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 700 | 740 | 680 | 760 | 1,960 |
| 21. பன்விலதென்ன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 375 | 327 | 500 | 435 | 750 |
| 22. தித்தபஜ்ஜல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 710 | 710 | 770 | 720 | 2,020 |
| 23. அலுத்கம ஜம்புகஹபிட்டிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 600 | 540 | 1,380 | 510 | 460 |
| 24. அம்பகஹபெலெஸ்ஸ | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 640 | 420 | 1,010 | 440 | 440 |
| 25. பட்டுமுல்ல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 310 | 250 | 260 | 260 | 730 |
| 26. பம்பரதெனிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 270 | 230 | 260 | 240 | 460 |
| 27. பொக்காவல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 760 | 900 | 730 | 820 | 2,160 |
| 28. கலஹா | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 560 | 550 | 1,040 | 560 | 1,080 |
| 29. கல்பிஹில்ல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 390 | 360 | 410 | 440 | 1,100 |
| 30. கெலிஓய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 350 | 410 | 390 | 1,040 | 1,170 |
| 31. ஹதரலியத்த | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 400 | 420 | 930 | 400 | 400 |
| 32. கஹவத்த | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 130 | 140 | 160 | 180 | 320 |
| 33. கொலொங்கொட | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 570 | 550 | 560 | 570 | 1,500 |
| 34. கொடலிகொட | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 790 | 760 | 2,200 | 750 | 760 |
| 35. குருந்துவத்த | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 700 | 770 | 700 | 1,840 | 2,070 |
| 36. மெதமஹனுவர | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 330 | 370 | 360 | 390 | 900 |
| 37. மொரஹேன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 160 | 168 | 180 | 200 | 440 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையம் | கேள்விப் பத்திர கட்டணம் ரூபா ச. | பிணைப் பணம் ரூபா ச. | வருமான சான்றிதழின் பெறுமதி ரூபா ச. | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித்திகதி | உணவின் அளவு அண்ணளவாக நோயாளர்களுக்கு | | | | |
| | | | | | புதிய மீன் | கோழி இறைச்சி | கருவாடு | காய் கறி | முட்டை |
| 38. நாரம்பனாவ | 500 0 | 1,000 0 | 75,000 0 | 2010, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 330 | 390 | 360 | 350 | 900 |
| 39. பமுணுவ | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 360 | 320 | 440 | 430 | 630 |
| 40. தலாத்துஓய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 540 | 640 | 760 | 600 | 1,000 |
| 41. உடகம-அட்டபாகே | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 180 | 140 | 160 | 180 | 460 |
| 42. உடுவெல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 450 | 430 | 300 | 410 | 1,040 |
| 43. வட்டப்பொல | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 630 | 660 | 1,060 | 640 | 1,040 |
| 44. யக்கஹபிட்டிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 360 | 390 | 900 | 320 | 380 |
| 45. துன்ஹின்ன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 130 | 140 | 160 | 180 | 320 |
| 46. உலப்பனை | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 400 | 420 | 390 | 460 | 1,000 |
| 47. பட்டியகம-பல்லேகம | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 360 | 330 | 580 | 380 | 530 |
| 48. முறுதலாவ (தாய்மைபேற்று நிலையம்) | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 330 | 350 | 520 | 240 | 470 |
| 49. வெஸ்ட்ஹோல் நாவலப்பிட்டிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 340 | 240 | 220 | 160 | 260 |
| 50. திகனகம புனருத்தாபன வைத்தியசாலை | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 4 ஆவது இணைப்பின்படி | | | | |
| 51. சிசில தெல்தொட்ட (புனர்வாழ்வு பயிற்சி நிலையம்) | 500 0 | 1,000 0 | 75,000 0 | | சமைக்காத உணவு வழங்கப்படும் | | | | |

## அட்டவணை II

2011 ஆம் ஆண்டுக்கான சமைத்த உணவு வழங்கல் - மாத்தளை மாவட்டம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையம் | கேள்விப் பத்திர கட்டணம் ரூபா ச. | பிணைப் பணம் ரூபா ச. | வருமான சான்றிதழின் பெறுமதி ரூபா ச. | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித்திகதி | உணவின் அளவு அண்ணளவாக நோயாளர்களுக்கு | | | | |
| | | | | | புதிய மீன் | கோழி இறைச்சி | கருவாடு | காய் கறி | முட்டை |
| மாவட்ட பொது வைத்தியசாலை | | | | | | | | | |
| 1. மாத்தளை | 500 0 | 5,000 0 | 5,00,000 0 | 2010, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 19,300 | 9,650 | 9,650 | 9,650 | 19,300 |
| மாவட்ட ஆதார வைத்தியசாலை | | | | | | | | | |
| 2. தம்புள்ள | 500 0 | 4,000 0 | 3,00,000 0 | | 4,800 | 2,650 | 2,450 | 2,450 | 4,800 |
| பிரதேச வைத்தியசாலைகள் | | | | | | | | | |
| 3. இறத்தோட்டை | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 2,500 | 1,250 | 1,250 | 1,250 | 2,500 |
| 4. கலேவெல | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 2,500 | 1,250 | 1,250 | 1,250 | 2,500 |
| 5. லக்கல பல்லேகம | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 2,400 | 1,200 | 1,200 | 1,200 | 2,400 |
| 6. மாதிபொல | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 1,600 | 800 | 800 | 800 | 1,600 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையம் | கேள்விப் பத்திர கட்டணம் ரூபா ச. | பிணைப் பணம் ரூபா ச. | வருமான சான்றிதழின் பெறுமதி ரூபா ச. | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித்திகதி | உணவின் அளவு அண்ணளவாக நோயாளர்களுக்கு | | | | |
| | | | | | புதிய மீன் | கோழி இறைச்சி | கரு வாடு | காய் கறி | முட்டை |
| 7. நாலந்த | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | 2010, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 1,600 | 800 | 800 | 800 | 1,600 |
| 8. கோங்கஹவெல | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 2,500 | 1,250 | 1,250 | 1,250 | 2,500 |
| 9. ஹெட்டிபொல | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 3,200 | 1,600 | 1,600 | 1,600 | 3,200 |
| 10. ஹந்துன்கமுவ | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 600 | 300 | 300 | 300 | 600 |
| 11. ஓவிலிகந்த | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 900 | 450 | 450 | 450 | 900 |
| 12. மாரக்க | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 300 | 150 | 150 | 150 | 300 |
| 13. ஹத்தொட்ட அமுன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 600 | 300 | 300 | 300 | 600 |
| 14. லெனதொர | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 300 | 150 | 150 | 150 | 300 |
| 15. யட்டவத்த | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 600 | 300 | 300 | 300 | 600 |
| 16. முவன்தெனிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | சமைக்காத உணவு வழங்கப்படும் | | | | |
| 17. இலுக்கும்புற | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 300 | 150 | 150 | 150 | 300 |
| 18. லேலிஅம்பே (புனர்வாழ்வு நிலையம்) | 500 0 | 1,000 0 | 75,000 0 | | சமைக்காத உணவு வழங்கப்படும் | | | | |
| 19. சீகிரிய (கிம்பிஸ்ஸ) | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 600 | 300 | 300 | 300 | 600 |

## அட்டவணை III

2011 ஆம் ஆண்டுக்கான சமைத்த உணவு வழங்கல் - நுவரெலியா மாவட்டம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையம் | கேள்விப் பத்திர கட்டணம் ரூபா ச. | பிணைப் பணம் ரூபா ச. | வருமான சான்றிதழின் பெறுமதி ரூபா ச. | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித்திகதி | உணவின் அளவு அண்ணளவாக நோயாளர்களுக்கு | | | | |
| | | | | | புதிய மீன் | கோழி இறைச்சி | கரு வாடு | காய் கறி | முட்டை |
| மாவட்ட தள வைத்தியசாலை | | | | | | | | | |
| 1. சாலை திக்ஓய | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | 2010, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 3,027 | 12,382 | 2,322 | 2,254 | 7,965 |
| மாவட்ட தள வைத்தியசாலை | | | | | | | | | |
| 2. சாலை ரிக்கில்லகஸ்கட | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 960 | 954 | 654 | 1,008 | 2,514 |
| பிரதேச வைத்தியசாலைகள் | | | | | | | | | |
| 3. வலப்பனை | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 930 | 936 | 1,191 | 1,005 | 3,357 |
| 4. உடபுஸ்ஸல்லாவ | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 1,212 | 912 | 1,008 | 1,014 | 3,090 |
| 5. மஸ்கெலியா | 500 0 | 3,000 0 | 2,00,000 0 | | 1,086 | 1,092 | 984 | 924 | 2,832 |
| 6. ஆகரபத்தன | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 648 | 648 | 780 | 696 | 1,920 |
| 7. லிந்துலை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 816 | 1,325 | 972 | 1,098 | 3,120 |
| 8. வட்டவலை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 876 | 1,176 | 846 | 176 | 3,156 |
| 9. றம்பொடை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 1,356 | 1,548 | 1,446 | 1,716 | 4,686 |
| 10. பகவந்தலாவை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 1,308 | 966 | 1,068 | 1,296 | 3,492 |
| 11. கொட்டகலை | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 1,110 | 756 | 1,734 | 954 | 1,734 |
| 12. மத்துரட்ட | 500 0 | 2,000 0 | 1,50,000 0 | | 810 | 756 | 678 | 708 | 2,400 |
| 13. மல்தெனிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 276 | 276 | 512 | 264 | 552 |
| 14. லக்ஸபான | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 774 | 642 | 576 | 612 | 2,046 |
| 15. கினிகத்தேன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 228 | 168 | 288 | 324 | 924 |
| 16. ஹங்குரன்கெத்த | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 576 | 636 | 432 | 1,104 | 1,032 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையம் | கேள்விப் பத்திர கட்டணம் ரூபா ச. | பிணைப் பணம் ரூபா ச. | வருமான சான்றிதழின் பெறுமதி ரூபா ச. | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித்திகதி | உணவின் அளவு அண்ணளவாக நோயாளர்களுக்கு | | | | |
| | | | | | புதிய மீன் | கோழி இறைச்சி | கரு வாடு | காய் கறி | முட்டை |
| 17. டயகம | 500 0 | 1,000 0 | 75,000 0 | 2010, டிசெம்பர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 346 | 432 | 870 | 576 | 966 |
| 18. கோனபிட்டிய | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 72 | 96 | 216 | 120 | 300 |
| 19. உதுரு மெதகும்புற | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 432 | 276 | 852 | 408 | 660 |
| 20. ஹய்பொரஸ்ட் | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 612 | 582 | 312 | 492 | 1,182 |
| 21. கோனகன்தென்ன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 336 | 384 | 288 | 228 | 732 |
| 22. முல்லோயா ஆரம்ப வைத்திய பிரிவு | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 612 | 582 | 312 | 492 | 1,182 |
| 23. நில்தன்டாஹின்ன | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 102 | 216 | 114 | 156 | 384 |
| 24. மந்தாரம்நுவர | 500 0 | 1,000 0 | 75,000 0 | | 48 | 12 | 72 | 108 | 132 |

## அட்டவணை 4

**திகன புனருத்தாபன வைத்தியசாலையில் நீண்ட காலமாக சிகிச்சை பெற்றுவரும் அங்கவீன நோயாளிகளுக்கான உணவுச் சுற்று**

| 1<br>கிழமை நாட்கள் | 2<br>காலை | 3<br>பகல் | 4<br>இரவு | 5 |
|---|---|---|---|---|
| ஞாயிறு | பயறு<br>வெங்காய மிளகாய்<br>சம்பல்<br>தேங்காய் | சோறு<br>புதிய மீன்<br>காய் மரக்கறி<br>பசளி போன்ற இலைகறி | சோறு<br>கரட்<br>கங்குங் சுண்டல் | 2600 |
| திங்கள் | பாணுடன் ஜாம் | மஞ்சள் சோறு<br>கிழங்கு<br>டின் மீன் கறி<br>வெங்காய வதக்கல் | சோறு<br>போஞ்சி<br>கீரை சுண்டல் | 2550 |
| செவ்வாய் | பால்சோறு<br>வெங்காய மிளகாய்<br>சம்பலுடன் | சோறு<br>காய் மரக்கறி<br>பருப்பு கறி<br>கருவாடு வதக்கல் | பாண்<br>பால்சொதி அல்லது<br>தக்காளி சொதியுடன் | 2600 |
| புதன் | பயறு<br>வெங்காய மிளகாய்<br>சம்பலுடன் | சோறு<br>புதிய மீன்<br>காய் மரக்கறி<br>கீரை சுண்டல் | சோறு<br>காய் மரக்கறி<br>வெள்ளரிக்காய் அல்லது<br>தக்காளி சலாது | 2600 |
| வியாழன் | பாண்<br>பருப்பு சொதியுடன் | மஞ்சள் சோறு<br>கோழியிறைச்சி கறி<br>கிழங்கு பால் கறி | சோறு<br>காய் மரக்கறி<br>கீரை சுண்டல் | 2600 |
| வெள்ளி | பனிஸ் 2<br>வாழைப்பழம் 1 | சோறு<br>காய் மரக்கறி<br>டின் மீன்<br>போஞ்சி கறி<br>கீரை சுண்டல் | நூட்ல்ஸ்<br>கிழங்கு அல்லது<br>பருப்பு கறி<br>முட்டை 1 | 2600 |
| சனி | பாண்<br>தேங்காய் சம்பல் | சோறு<br>இலங்கை பருப்பு<br>பீட்ரூட்<br>கீரை சுண்டல் | சோறு<br>கருவாடு வதக்கல்<br>காய் மரக்கறி<br>கீரைச் சுண்டல் | 2600 |

### அட்டவணை 5

**திகன புனருத்தாபன வைத்தியசாலையின் நீண்ட காலமாக சிகிச்சை பெற்றுவரும் அங்கவீன சிறுவர்களுக்கான உணவுச்சுற்று**

வயது 06 தொடக்கம் 12 வரை - S - 1
வயது 02 தொடக்கம் 06 வரை - S - 2 } எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
வயது மாதம் 09 தொடக்கம் 02 வரை - S - 3

| 1<br>கிழமை நாட்கள் | 2<br>காலை | 3<br>பகல் | 4<br>இரவு | 5 |
|---|---|---|---|---|
| ஞாயிறு | பயறு<br>தேங்காய்<br>வாழைப்பழம் 1 | சிவப்பரிசி சோறு<br>புதிய மீன் பால்கறி<br>பொன்னாங்கனி<br>கீரைச் சுண்டல்<br>வற்றாளை கிழங்கு | நூட்ல்ஸ்<br>பருப்பு பால் கறி<br>வாழைப்பழம் | 520 |
| திங்கள் | கடலை<br>தேங்காய்<br>பப்பாளி | மஞ்சள் சோறு<br>முட்டை<br>பால்சொதி | பாண்<br>பட்டர்<br>முட்டை | 510 |
| செவ்வாய் | பால்சோறு<br>வாழைப்பழம் 1 | சிவப்பரிசி சோறு<br>புதிய மீன் பால்கறி<br>வல்லரை சம்பல்<br>கருவாடு | பாண்<br>பால்சொதி<br>வாழைப்பழம் | 520 |
| புதன் | கடலை<br>தேங்காய்<br>பப்பாளி | சிவப்பரிசி சோறு<br>புதிய மீன் பால்கறி<br>பூசணிக்காய்<br>கீரை சுண்டல் | சிப்பரிசி சோறு<br>கிழங்கு பால் சொதி<br>பொன்னாங்கன்னி<br>சுண்டல் | 520 |
| வியாழன் | பாண்<br>ஜாம்<br>பப்பாளி | மஞ்சள் சோறு<br>கோழியிறைச்சி கறி<br>கிழங்கு பால் கறி | பாண்<br>பட்டர்<br>வாழைப்பழம் | 520 |
| வெள்ளி | கௌப்பி<br>தேங்காய்<br>பப்பாளிப்பழம் | சிவப்பரிசிச்சோறு<br>காய் மரக்கறி<br>போஞ்சி கறி<br>கீரைச் சுண்டல்<br>முட்டை | நூட்ல்ஸ்<br>கிழங்கு சொதி<br>பப்பாளிப்பழம் | 520 |
| சனி | பனிஸ்<br>வாழைப்பழம் 1 | சிவப்பரிசிசோறு<br>பருப்பு கறி<br>பீட்ரூட்<br>கீரைச் சுண்டல் | சிவப்பரிசி சோறு<br>கரட் கறி<br>கருவாடு<br>கீரைச் சுண்டல் | 530 |

* ஒரு நாளைக்கு இரண்டு முறை காலையும் மாலையும் பால் வழங்க வேண்டியதுடன் அதற்கு அவசியமான பால்மா, சீனி பற்றிய விபரம் "ஆ" இணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

* S-1, S-2, S-3 என்பவற்றுக்கான சமைக்காத உணவு பற்றிய அளவுகள் "அ" மற்றும் "ஆ" இணைப்புகளில் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை 6

மாத்தளை பொது வைத்தியசாலையின் காச நோயாளர்களுக்கான உணவுச்சுற்றுக்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கிழமை நாட்கள் | காலை | பகல் | இரவு | |
| ஞாயிறு | பயறு<br>வெங்காய மிளகாய்<br>சம்பல்<br>தேங்காய் | சோறு<br>புதிய மீன்<br>காய் மரக்கறி<br>பசளி போன்ற<br>இலைகறி | சோறு<br>கரட் கறி<br>கங்குங் சுண்டல்<br>முட்டை 1 | 3600 |
| திங்கள் | பாணுடன்<br>ஜாம் | மஞ்சள் சோறு<br>கிழங்கு<br>டின் மீன் கறி<br>வெங்காய வதக்கல் | சோறு<br>போஞ்சி கறி<br>கீரை சுண்டல்<br>முட்டை 1 | 3600 |
| செவ்வாய் | பால்சோறு<br>வெங்காய மிளகாய்<br>சம்பலுடன் | சோறு<br>காய் மரக்கறி<br>பருப்பு கறி<br>கருவாடு வதக்கல் | பாண்<br>பால்சொதி அல்லது<br>தக்காளி சொதியுடன்<br>முட்டை 1 | 3600 |
| புதன் | பயறு<br>வெங்காய மிளகாய்<br>சம்பலுடன் | சோறு<br>புதிய மீன்<br>காய் மரக்கறி<br>கீரை சுண்டல் | சோறு<br>காய் மரக்கறி<br>வெள்ளரிக்காய் அல்லது<br>தக்காளி சலாது<br>முட்டை 1 | 3600 |
| வியாழன் | பாண்<br>பருப்பு<br>சொதியுடன் | மஞ்சள் சோறு<br>கோழியிறைச்சி கறி<br>கிழங்கு பால் கறி | சோறு<br>காய் மரக்கறி<br>கீரை சுண்டல்<br>முட்டை 1 | 3600 |
| வெள்ளி | பனிஸ் 2<br>வாழைப்பழம் 1 | சோறு<br>காய் மரக்கறி<br>டின் மீன் கறி<br>போஞ்சி கறி<br>கீரை சுண்டல் | நூட்ல்ஸ்<br>கிழங்கு அல்லது பருப்பு கறி<br>முட்டை 2 | 3600 |
| சனி | பாண்<br>தேங்காய் சம்பல் | சோறு<br>இலங்கை பருப்பு<br>பீட்ரூட்<br>கீரைச் சுண்டல்<br>முட்டை 1 | சோறு<br>கருவாடு வதக்கல்<br>காய் மரக்கறி<br>கீரைச் சுண்டல் | 3600 |

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2010***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***நவெம்பர்*** | .. | வியாழன் | 04.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 21.10.2010 |
| | | வெள்ளி | 12.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.10.2010 |
| | | வெள்ளி | 19.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.11.2010 |
| | | வெள்ளி | 26.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.11.2010 |
| ***திசெம்பர்*** | .. | வெள்ளி | 03.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.11.2010 |
| | | வெள்ளி | 10.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.11.2010 |
| | | வெள்ளி | 17.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.12.2010 |
| | | வெள்ளி | 24.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.12.2010 |
| | | வெள்ளி | 31.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.12.2010 |

***அட்டவணை - 2011***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | 07.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.12.2010 |
| | | வெள்ளி | 14.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.12.2010 |
| | | வெள்ளி | 21.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.01.2011 |
| | | வெள்ளி | 28.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.01.2011 |

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*